# பத்மனாபபுரம் நகராட்சி

# 2020-2021- ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

## 1) அமைப்பும், நிர்வாகமும்

பத்மனாபபுரம் நகர் மன்றம் 1–10–1920 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு, தொடர்ந்து மூன்றாம் நிலை நகராட்சியாகவே செயல்பட்டு வந்தது. பின்னர் அரசாணை (நிலை) எண். 85 ந.நி.கு.வ.துறை நாள் 22–5–1998–ன்படி இந்நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டது. மேலும் தக்கலை மற்றும் கல்குளம் ஆகிய வருவாய் கிராமங்களின் சில குறிப்பிட்ட பகுதிகள் இந்நகராட்சி எல்கைக்கு உட்பட்டதாகும். இந்நகரின் மொத்த பரப்பளவு 6.47 சதுர கி.மீ ஆகும். 2011–ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 21342 ஆகும். அவர்களில் 10518 ஆண்களும், 10824 பெண்களும் உள்ளனர்.

## 2) நகர் மன்றம்

இந்நகர் பகுதி 21 வார்டுகளை கொண்டுள்ளது. இந்நகர் மன்றத்தில் அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை – 21 ஆகும்.

| | | |
|---|---|---|
| பொது | | – 9 |
| ஆதிதிராவிடர்மற்றும் பழங் குடியினர் | – பொது | – 1 |
| | பெண் | – 1 |
| பெண்கள் | | – 10 |
| மொத்தம் | | – 21 |

**நகர் மன்றத் தலைவர்–**

26–10–2016 முதல் நகர் மன்ற தலைவர் பதவி காலியாக இருந்து வருகிறது.

**நகர் மன்ற உறுப்பினர்கள் விவரம்**

26–10–2016 முதல் நகர் மன்ற உறுப்பினர் பதவி காலியாக இருந்து வருகிறது.

அறிக்கை ஆண்டில் ஆணையர்கள் தனி அலுவலர்களாக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வந்தனர். 01–04–2020 முதல் 13–02–2021 வரை திரு. பெர்பெற்றி டெரன்ஸ் லியோன் ஆணையாளர் தனி அலுவலராகவும், 14/02/2021 முதல் 31/03/2021 வரை

திரு.ஆர்.ராஜாராம், துப்புரவு அலுவலர் ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலராகவும் செயல்பட்டு வந்தார். 20/03/2020 முதல் 31/03/2020 வரை திரு.பெர்பெற்றி டெரன்ஸ் லியோன் ஆணையர் அவர்கள் தனி அலுவலராகவும் செயல்பட்டு வருகின்றார்.

## 3. மன்றக் கூட்டங்கள்

01–04–2020 முதல் 31–03–2021 முடிய உள்ள அறிக்கையாண்டில் 11 சாதாரண கூட்டங்களும் 9 அவசர கூட்டமும் நடைபெற்றன. மொத்தம் 20 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

| மன்ற கூட்டங்களின் விபரம் | மன்றப் பொருட்கள் |
|---|---|
| சாதாரண கூட்டம் | 11 |
| அவசர கூட்டம் | 9 |
| சிறப்பு கூட்டம் | 0 |
| மொத்தம் | 20 |

## 4.நகர் மன்ற தேர்தல்

சென்னை, உயர் நீதி மன்ற உத்தரவின்படி நடப்பு ஆண்டில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறவில்லை. ஆதலால் 26–10–2016 முதல் தனி அலுவலர் தலைமையில் நகர் மன்றக் கூட்டம் நடைபெற்று வருகிறது. நகராட்சி ஆணையர்கள் தனி அலுவலர்களாக பதவி வகித்து வருகின்றனர்.

**தனி அலுவலர்–**

01/04/2020 முதல் 13/02/2021 வரை திரு. பெர்பெற்றி டெரன்ஸ் லியோன் அவர்கள் தனி அலுவலராக செயல்பட்டு வந்தார். 14/02/2021 முதல் 30/03/2021 வரை திரு. ஆர்.ராஜாராம், துப்புரவு அலுவலர் தனி அலுவலராக அறிக்கை ஆண்டு இறுதி வரை செயல்பட்டுள்ளார்.

## 5) அலுவலர்கள்

**அ) ஆணையாளர்–**

01/04/2020 முதல் 13/02/2021 வரை திரு. பெர்பெற்றி டெரன்ஸ் லியோன் அவர்கள் ஆணையாளராக செயல்பட்டு வந்தார். 14/02/2021 முதல் 30/03/2021 வரை திரு. ஆர்.ராஜாராம், துப்புரவு அலுவலர் ஆணையாளர் (பொ) அறிக்கை ஆண்டு இறுதி வரை செயல்பட்டுள்ளார்.

ஆ) பொறியாளர்–

01–04–2020 முதல் 29–10–2020 வரை இந்நகராட்சிப் பொறியாளராக கூடுதல் பொறுப்பாக திருமதி. பேரின்பம் பணிபுரிந்துள்ளார். 30/10/2020 முதல் 31/03/2021 வரை திருமதி. கே. லதா நகராட்சி பொறியாளராக பணிபுரிந்துள்ளார்.

இ )மேலாளர்–

திரு. மா. சக்திகுமார் அறிக்கை ஆண்டில் மேலாளராகப் பணிபுரிந்துள்ளார்.

## 6, நிர்வாகம்

அறிக்கை ஆண்டில் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கு ஊதியமாக ரூ.298 இலட்சம் செலவிடப்பட்டது. அறிக்கை ஆண்டில் மேல் முறையீடு செய்யக் கூடிய தண்டனை யாருக்கும் வழங்கப்படவில்லை. அறிக்கை ஆண்டில் அலுவலர்கள் நியமனம் மற்றும் தண்டனை வழங்குவது சம்மந்தப்பட்ட விதிமுறைகள் முறையாக கடை பிடிக்கப்பட்டன.

இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் மற்றும் காலிப் பணியிட விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | பணியிடங்கள் விபரம் | அனுமதிக்கப் பட்ட பணியிடம் | பணிபுரிந்து வரும் பணியாளர்கள் | காலிப் பணியிட விவரம் |
|---|---|---|---|---|
| I, | பொது பிரிவு | | | |
| 1. | மேலாளர் | 1 | 1 | – |
| 2. | உதவியாளர் | 1 | 1 | – |
| 3. | உதவி திட்ட அமைப்பாளர் | 1 | 1 | – |
| 4. | தட்டச்சர் | 1 | 1 | – |
| 5. | இளநிலை உதவியாளர் | 4 | 4 | – |
| 6. | பதிவறை எழுத்தர் | 1 | 1 | – |
| 7. | அலுவலக உதவியாளர் | 1 | 1 | – |
| 8. | இரவு காவலர் | 1 | 1 | – |
| II | வருவாய் பிரிவு | | | |
| 1. | வருவாய் ஆய்வாளர் | 1 | 1 | – |
| 2. | வருவாய் உதவியாளர் | 4 | 3 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| III | <u>பொறியியல் பிரிவு</u> | | | |
| 1. | பொறியாளர் | 1 | – | 1 |
| 2. | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 | 1 | – |
| 3. | மின் கம்பியாளர் | 1 | 1 | – |
| 4. | மின் கம்பி உதவியாளர் | 1 | – | 1 |
| 5. | பேருந்து நிலைய காவலர் | 1 | 1 | – |
| IV | <u>நகரமைப்பு பிரிவு</u> | | | |
| 1. | நகரமைப்பு ஆய்வாளர் | 1 | 1 | – |
| V | <u>பொது சுகாதார பிரிவு</u> | | | |
| 1. | துப்புரவு அலுவலர் | 1 | 1 | – |
| 2. | துப்புரவு ஆய்வாளர் | 1 | 1 | – |
| 3. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 3 | 1 | 2 |
| 4. | ஓட்டுநர் | 3 | 3 | – |
| 5. | மகப்பேறு உதவியாளர் | 1 | 1 | – |
| 6. | மகப்பேறு ஆயா | 1 | 1 | – |
| 7. | துப்புரவு பணியாளர் | 42 | 33 | 9 |

## <u>7.போக்குவரத்து</u>

<u>பொறியியல் அலுவலர்கள் –</u>

அறிக்கை ஆண்டில் 01/04/2020 முதல் 29–10–2020 வரை திருமதி. பேரின்பம் நகராட்சி பொறியாளர் கூடுதல் பொறுப்பாகவும், திருமதி. லதா 30/10/2020 முதல் 31/03/2021 வரை நகராட்சி பொறியாளராகவும் பணி புரிந்து வந்துள்ளார்கள்.

பொறியியல் பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அறிக்கை ஆண்டில் ரூ. 9.45 லட்சம் செலவிடப்பட்டது. சென்ற ஆண்டில் இது ரூ. 8.94 லட்சமாக இருந்தது.

## <u>8, சாலைகள், பாலங்கள் பரிசல்கள் மற்றும் கட்டிடங்கள்.</u>

<u>அ)சாலைகள் –</u>

இந்நகரில் 43.50 கி.மீ சாலைகள் கீழ்கண்டவாறு உள்ளது.

தார் சாலைகள் – 22.750 கி.மீ

சிமெண்ட சாலைகள் 9.155 கி.மீ

பேவர் பிளாக் சாலை – 11.595 கி.மீ

<u>மண் சாலைகள் – –</u>

<u>மொத்தம் – 43.50 கி. மீ</u>

சாலை பராமரிப்பிற்கென அறிக்கை ஆண்டில் செலவினம் ரூ. இலட்சமாக இருந்தது.

சாலைகளின் போக்குவரத்து காவல் துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. புதியதாக சாலை போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கப்பட்டு போக்குவரத்து சீராக்கப்பட்டு வருகின்றது. இது சம்மந்தமாக நகராட்சியில் எந்த வித உபவிதிகளும் ஏற்படுத்தப்படவில்லை.

**ஆ) நிதி உதவிகள்–**

அறிக்கையாண்டில் கீழே காணும் விவரப்படி நிதி உதவி பெறப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வந்தது.

## 2020–2021–ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்ட பணிகள்.

| ஆண்டு | திட்ட பெயர் | அனுமதிக்கப் பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) | எடுக்கப் பட்ட பணிகள் | முடிவுற்ற பணிகள் | செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020 | – | – | – | – | – |
| 2 | சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020 | 11.25 | 5 | – | – | வேலைகள் நடைபெற்று வருகின்றது. |
| 3 | தண்ணீர் விநியோக பணிகள் | 7.00 | 1 | 1 | 7.00 | பணி முடிவுற்றது. |
| 4 | பொது நிதி திட்டம் 2019–2020 | – | – | – | – | – |

| | | |
|---|---|---|
| நகராட்சி அலுவலகம் | – | 1 |
| முதலமைச்சர்அவர்களின் கல்வி சத்துணவு கூடங்கள் | – | 6 |

| | | |
|---|---|---|
| துப்பரவு பணியாளர்களுக்கான குடியிருப்புகள். | – | 28 |
| பேருந்து நிலையம் | – | 1 |
| பேருந்து நிலைய கட்டண கழிவறை | – | 2 (ஆண் , பெண்) |
| பேருந்து நிலைய கடைகள் | – | 26 |
| பேருந்து நிலைய ஓய்வு அறைகள் | – | 1 |
| டைம் கீப்பர் ஆபீஸ் | – | 1 |
| குமாரகோவில் அருகில் உள்ள கட்டண கழிப்பறை | – | 1 |
| தாய் சேய் நல மையம் | – | 1 |
| கலவை உரக்கிடங்கு | – | 1 |
| மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | – | 4 |
| பத்மனாபபுரம் அரண்மனை அருகில் உள்ள பூங்கா | – | 1 |
| நகராட்சி லால்பகதுார் திடல் கடைகள்(டி.டி.பி கடை)<br>M.L.A –கடை | – | 6<br><br>16 |
| சர்.சி.பி. இராமசுவாமி ஐயர் நினைவு கட்டிடம் (டவுண்உறால்) | – | 1 |
| மீன் மார்க்கெட் மார்க்கெட் கடைகள் | – | 1 |
| பேட்டை மார்க்கெட் | | 1 |
| பழைய பேருந்து நிலைய கடைகள் | – | 8 |
| பொதுக் கழிப்பிடங்கள் | – | 6 |

## 9. நகரமைப்பு

நகர பகுதிகளிலுள்ள கட்டுமானங்களை கண்காணிக்கும் விதமாக நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்.152, நாள் 24–8–1998–ல் இந்நகராட்சிக்கு மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் அனுமதிக்கப்பட்டது.

நகரின் பகுதியில் முழுமை திட்டம் ( Master Plan) 24-2-1993 முதல் நகர் மன்றத் தீர்மானம் எண். 1 நாள் 24–2–1993–ன் படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதில் நகரின் பகுதிகளை உபயோகிக்கும் முறைக்கு ஏற்றவாறு கீழ்க்காணும் விகிதத்தில் பிரிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| குடியிருப்பு பகுதி | ரூ. 50 | வணிக பகுதி | ரூ.70 |
| தொழிற்சாலை பகுதி | ரூ.25 | கல்வி நிலைய பகுதி | ரூ.20 |
| பொது உபயோக பகுதி | ரூ.30 | போக்குவரத்திற்கான பகுதி | ரூ.20 |
| நீர் நிலைய உபயோக பகுதி | ரூ.50 | விளைநிலங்கள் உபயோக பகுதி | ரூ.50 |

இதன்படி இப்பகுதிகளில் கட்டிட உரிமையாணை வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் கட்டிட உரிமையாணை கோரி 145 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இதில் 95 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, 50 விண்ணப்பங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் மொத்தம் 3 எண்ணம் கட்டிடங்கள் அனுமதி இல்லாமல் கட்டப்படுவதை அறிந்து அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் திருமதி. எஸ். சுதா , நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார்.

## 10, கருவிகளும், தளவாடங்களும் (மின் பொருட்கள் )

அறிக்கையாண்டில் மின் பொருட்கள் ரூ. 4.35 இலட்சத்திற்கு வாங்கப்பட்டன.

## 11, விளக்கு வசதிகள் –

அரசு ஆணை நிலை எண். 344, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 9/6/1989–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு இணங்க நகராட்சி எல்கைக்குள் உள்ள தெருவிளக்குகளை நகராட்சியால் பராமரிப்பு செய்து வருகிறது. இந்நகராட்சியில் ஒரு மின் கம்பியாளரும், ஒரு மின் கம்பி உதவியாளரும் பணிபுரிந்து வருகின்றனர். இந்நகராட்சிப் பகுதியில் 31–03–2020 முடியவுள்ள காலத்தில் கீழ்க்கண்ட விவரப்படி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

1) அலங்கார விளக்குகள் – 47
2) சோடியம் ஆவி விளக்குகள் – 17
3)குழல் விளக்குகள் – 1156
4) உயர் கோபுர மின்விளக்கு – 9
5) LED விளக்கு – 193

6)சி.எப்.எல் விளக்கு – 10
மொத்தம் – 1432

தெருவிளக்குகள் பராமரிப்பிற்காக அறிக்கை ஆண்டில் ரூ. 4.35 இலட்சம் செலவிடப்பட்டது. இது சென்ற ஆண்டில் ரூ. 3.41 இலட்சம் ஆக இருந்தது. தெருவிளக்குகளுக்கு மின்சார கட்டணம் நிதி நிலைக்கேற்ப செலுத்தப்பட்டு வருகிறது. (தற்போது 2020–2021–ஆம் ஆண்டிற்கு மின்சார கட்டணம் ரூ.13.20 இலட்சம் நிலுவையாக இருந்து வருகிறது.

## 11. கல்வி

### அ. ஆரம்பக் கல்வி

இந்நகராட்சி மூலம் பள்ளிக் கூடங்கள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. இந்நகரில் 7 அரசினர் நடுநிலைப் பள்ளிகளும், 8 தனியார் ஆரம்ப பள்ளிகளும் 3 மேல் நிலை பள்ளிகளும் உள்ளன.

### ஆ.இடை நிலை கல்வி

#### சிறப்பு பள்ளிகள்

இந்நகராட்சிக்கு உட்பட்ட வெட்டிக் கோணம் பகுதியில் தனியாருக்கு சொந்தமான ஒரு தொழில் பயிற்சி பள்ளி (ஐ.டி.ஐ) உள்ளது. 5 கணிப்பொறி பயிற்சி நிலையம் மற்றும் ஒரு தனியார் தட்டெழுத்து பயிற்சி நிலையம் உள்ளது.

## 12)பொது சுகாதாரம்

### அ)மருத்துவ வசதி

நகர் மன்றத்தால் மருத்துவமனைகள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. நகரில் அரசு தலைமை மருத்துவமனை ஒன்றும், 9 தனியார் மருத்துவமனைகளும் இயங்கி வருகிறது.

NRHM திட்டத்தின் கீழ் நகராட்சிக்குட்பட்ட பத்மனாபபுரம் என்ற இடத்தில் நகர்ப்புற சுகாதார மையம் ஒன்று பொது மக்களின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது. ஒரு அரசு மருத்துவர் தலைமையில் போதிய பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றது.

### ஆ. அலுவலர்கள் –

இந்நகர் மன்றத்தில் ஒரு துப்பரவு அலுவலர் பணியிடமும் , ஒரு துப்பரவு ஆய்வாளர் பணியிடமும், 3 துப்பரவு பணி மேற்பார்வையாளர் பணியிடமும் அனுமதிக்கப்பட்டு

உள்ளது. இரண்டு துப்புரவு பணி மேற்பார்வையாளர் பதவி அறிக்கை ஆண்டில் காலியாக இருந்தது. சுகாதார அலுவலராக திரு. ஆர். ராஜாராம் மற்றும் சுகாதார ஆய்வாளராக திரு. வீ. முத்துராமலிங்கம் அறிக்கை ஆண்டு முழுவதும் பணியாற்றி வந்துள்ளார்.

<u>இ) நோய் தடுப்பு அமைப்பு–</u>

பொது சுகாதாரம், சுற்றுப்புற தூய்மை மகப்பேறு, குழந்தைகள் நலம், உணவு, தண்ணீர் தொற்று நோய்கள் முதலிய தடுப்பு பற்றிய பிரச்சாரங்கள் சுற்றறிக்கைகள் மூலம் போதிக்கப்பட்டன. போலியோ தடுப்பு முகாம் மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி டெங்கு விழிப்புணர்வு பற்றி பொது மக்களுக்குஅவ்வப்பொழுது தெரிவிக்கப்பட்டது. டெங்கு விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது. டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பள்ளி மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பிளாஸ்டிக் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டது. கொரோனா தடுப்பு நடவடிக்கை மற்றும் கொரோனா தடுப்பு ஊசி முகாம் செயல்படுத்தப்பட்டது. பொது மக்கள் அனைவரும் தடுப்பு ஊசி போட விழிப்புணர்வு செய்யப்பட்டது.

<u>ஈ) பிறப்பு விகிதமும், மகப்பேறு உதவியும்</u>

துப்பரவு ஆய்வாளர் பிறப்பு, இறப்பு பதிவு செய்து வருகிறார். அறிக்கை ஆண்டில் பிறப்பு எண்ணிக்கை 208 பிறப்பு பதிவாகியுள்ளது. இது சென்ற ஆண்டு 184 ஆகும்.

நகர் மன்றத்தில் ஒரு மகப்பேறு உதவியாளரும், ஒரு மகப்பேறு ஆயாவும் பணியில் இருந்து வந்தனர்.

<u>உ) நோய் தடுப்பு பாதுகாப்பு திட்டம்–</u>

கருவுற்ற தாய்மார்களுக்கு இரணகன்னி தடுப்பூசி முதல் தடவை 228 டோஸ்களும், இரண்டாவது 226 டோஸ்களும் கொடுக்கப்பட்டது. 16 மாதம் முதல 24 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு 203 டி.டி.ற்றி மற்றும் போலியோ சொட்டு மருந்து 203 குழந்தைகளுக்கும் பென்டாவேலண்ட் 208 குழந்தைகளுக்கும் 208 டோஸ் போலியோ கொடுக்கப்பட்டது.

1 1/2 வயது முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 203 பூஸ்டர் டோஸ்கள் கொடுக்கப்பட்டது. 1 வயதுக்குட்பட்ட 206 குழந்தைகளுக்கு 203 பூஸ்டர் குழந்தைகளுக்கும் மணல் வாரி தடுப்பு ஊசி கொடுக்கப்பட்டது. 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 200 டிடிற்றி கொடுக்கப்பட்டது, மற்றும் பி.சி.ஜி 206 ஊசி

போடப்பட்டது. 10 வயதுக்குட்பட்டவர்களுக்கு டி.டி. 191 டோஸ் மற்றும் 16 வயதுக்குட்பட்டவர்களுக்கு டிடி. 196 டோஸ் போடப்பட்டது.

**<u>ஊ) இறப்பு விகிதமும், பரவும் நோய்களும்–</u>**

அறிக்கை ஆண்டில் 159 இறப்புகள் பதிவாகியுள்ளது. இது சென்ற ஆண்டில் 147ஆக இருந்தது. அறிக்கை ஆண்டில் குறிப்பிடத்தக்க கொள்ளை நோய்கள் தொற்று நோய்கள் மற்றும் அம்மை நோய்கள் ஏதும் இந்நகராட்சி பகுதியில் இல்லை.

**<u>எ) சுகாதாரம் (பாதுகாவல் குழு)</u>**

நகரின் பொதுவாக துப்பரவு பணிகளுக்கு ஒரு துப்பரவு அலுவலரும், ஒரு துப்பரவு ஆய்வாளர், 2 துப்பரவு பணி மேற்பார்வையாளர்களும் உள்ளனர். தற்போது துப்பரவு பணிகளுக்கு 33 துப்பரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நகர் பகுதி முழுவதும் தினசரி துப்பரவு பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகிறனர். மேலும், கோயில் ˙ சர்ச் மற்றும் மசூதி ஆகிய வழிபாட்டு ஸ்தலங்களில் விழாக்கள் நடைபெறும்போது சிறந்த முறையில் தூய்மை பணி நடத்தப்பட்டது.

நகராட்சிப் பகுதியில் பொதுக் கழிப்பிடங்கள் கீழ்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகிறது.

<u>பொது கழிப்பிடங்கள்</u>

1) மீன்சந்தை – 1
2) மார்க்கெட் – 1
3) குமாரகோவில் – 1

<u>சமுதாய கழிப்பிடங்கள்</u>

1) ஆர்.சி. தெரு–1
2)வாழவிளை–1
3)கொல்லங்குடி முக்கு
4)குமாரகோவில் (NI College சந்திப்பு)–1
5)பத்மனாபபுரம் (நம்ம டாய்லட்) –1

**<u>ஏ) காட்சிகளும், விழாக்களும்–</u>**

இந்நகரில் குமாரகோவில் திருக்கல்யாணம் என்ற திருவிழாவும் , தக்கலை ஞானமாமேதை ஷெய்கு பீர்முகம்மது ஒலியுல்லாஉற ரலி திருவிழாவும், எலியாஸ் ஆர்.சி.சர்ச் ஆண்டு விழா ஆகிய முக்கிய விழாக்களாக கொண்டாடப்படுகிறது. இவ்விழா காலங்களில் சுகாதார வசதி செய்யப்பட்டு வருகிறது. இதுபோன்ற வசதிகள் எல்லா வழிபாட்டு தலங்களில் நடைபெறும் விழாக்களுக்கும் சிறப்பான முறையில் சுகாதார பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

**ஐ) பொது சுகாதார துப்பரவு பணியாளர்கள் வசிக்கும் நிலை பற்றிய விவரங்கள்:–**

அறிக்கை ஆண்டில் மொத்தம் நிரந்தர சுகாதார துப்பரவு பணியாளர்களின் எண்ணிக்கை 33 ஆகும். 8 பணியிடங்கள் காலியாக உள்ளது.

துப்பரவு பணியார்களுக்கென ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் 12 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 16 வீடுகள் கூடுதலாக கட்டி முடிக்கப்பட் டு துப்புரவு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வசித்து வருகின்றனர்.

துப்பரவு பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. துப்பரவு பணியாளர்களுக்கு அறிக்கை ஆண்டில் ரூ. 40,000 /– செலவில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

**ஓ) கழிவுநீர் பண்ணை–**

இந்நகராட்சியால் கழிவுநீர் பண்ணை எதுவும் பராமரிக்கப்படவில்லை.

## 13.குடிநீர் விநியோகம்

**விநியோக முறைகள்**

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் நடைமுறையில் உள்ளது. மேலும் இந்நகரில் உள்ள மக்கள் நகராட்சிக்கு சொந்தமான 55 பொதுக் குழாய்கள் மற்றும் 99 மினி பவர் பம்ப் மூலமும் குடிநீர் மற்றும் பிற உபயோகத்திற்கு தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நகராட்சிக்கு 1989 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு பத்மனாபபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி திருவிதாங்கோடு பேரூராட்சி மற்றும் 20 வழியோர கிராமங்கள் பயன் பெறும் வகையில் குழித்துறை தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர திட்டமிடப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

**கொள்ளளவு**

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசு மருத்துவமனை, தக்கலை | – | 3 லட்சம் லிட்டர் |
| 2 | தக்கலை மார்க்கெட் | – | 2.50 லட்சம் லிட்டர் |
| 3 | பத்மனாபபுரம் | – | 2 லட்சம் லிட்டர் |

| | | | |
|---|---|---|---|
| 4 | புலியூர்குறிச்சி | – | 2 லட்சம் லிட்டர் |
| | மொத்த கொள்ளளவு | – | 9.50 இலட்சம் லிட்டர் |

இத்திட்டம் 5–3–1996 அன்று பொது மக்களின் பயன்பாட்டுக்காக தொடங்கப்பட்டு . தற்போது அரசு மருத்துவமனை , தக்கலை மார்க்கெட் திடல், புலியூர்குறிச்சி மற்றும் பத்மனாபபுரம் ஆகிய 4 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் 10.50 கி.மீ பிரதான குழாய்களின் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு பின்பு 43.77 கி.மீ. நீளமுள்ள பகிர்மானக் குழாய்களின் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 87 லிட்டர் வீதம் மூன்று நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுப்பதற்கு குடிநீர் விநியோக வரைவு உபவிதிகள் தயாரிக்கப்பட்டு திருநெல்வேலி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கண்காணிப்பு பொறியாளர் திருநெல்வேலி அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு பொறியாளரிடம் அனுமதி கோரியதில் இரண்டாம் கட்டமாக 1500 குடிநீர் இணைப்பிற்காக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி நகரிலுள்ள குடியிருப்புகளுக்கு 26–1–1998 முதல் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டது. மேலும் இரண்டாவது கட்டமாக 5000 இணைப்புகளுக்கு அனுமதி பெறப்பட்டது. அதன்படி இதுவரை 4625 குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. தற்போது நகராட்சியின் குடிநீர் இருப்பு கணக்கிட்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது பத்மனாபபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.14.87 கோடி மதிப்பீட்டில் நான்கு மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ( மொத்த கொள்ளளவு–4.90 லட்சம் லிட்டர்) மற்றும் குடிநீர் நீரேற்றம் குழாய்கள் – 15.85 கி.மீ குடிநீர் பகிர்மானக் குழாய்கள் –21.45.கி.மீ ஆகியவையும் 8 பேரூராட்சிகள் மற்றும் 374 ஊரக குடியிருப்புகளுக்கும் சேர்த்து பொதுவாக 36.88 MLDகுடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 31–12–2021–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணி நிறைவடையும் பட்சத்தில் இந்நகராட்சிக்கு தினமும் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்கப்படும்.

## 14, கழிவுநீர் வாய்கால் திட்டம்

நகரில் கழிவுநீர் வாய்கால் திட்டம் எதுவும் இல்லை. தெருக்கள் மற்றும் சாலைகளின் ஓரங்களில் 14.41 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் வாய்கால் உள்ளது. கழிவுநீர்

வாய்கால் சுத்தம் செய்யும் பணிக்கென தனியாக துப்பரவு பணியாளர்கள் எவரும் இல்லை.

## 15. பொது சுகாதாரம் இதர இனங்கள்

**பொது நலமும், பாதுகாப்பும்–**

நகராட்சி பகுதியில் தீயணைப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

## பிரதி பலனை தரத்தக்க வருவாய்கள்

## 16. பொது வருவாய்

அறிக்கை ஆண்டில் நகராட்சியால் ஒரு பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள 26 கடைகள், பழைய பேருந்து நிலையத்தில் உள்ள புதிய கடைகள் 8, வாரச் சந்தையில் உள்ள22 கடைகள் முதலியன பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன. பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியினரால் வழங்கப்பட்ட 2 குடிநீர் சுத்திகரிப்பு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

## 17, சந்தைகள், வண்டிப் பேட்டைகள், ஆடடி சாலை முதலியன.

**அ) சந்தைகள்–**

இந்நகராட்சியால் தக்கலை பேட்டை சந்தை ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சந்தை வாரம் இருமுறை நடந்து வருகிறது. துறை மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் ரூ.26.10 இலட்சம் துறைமூலம் வசூல் செய்யப்பட்டு உள்ளது.

**ஆ) ஆடு அடிக்கும் தொட்டி–**

ஆடு ஒன்றுக்கு ரூ. 10/–வீதம் அறிக்கையாண்டில் ரூ.65100/– வசூலிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.65600/– வசூல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வசூல் துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

**இ) பேருந்து நிலையம்–**

இந்நகர் மன்றத்தால் ஒரு பேருந்து நிலையம் (சி பிரிவு) பராமரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் பேருந்து 1–க்கு ரூ.8/– நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில்பொது ஏலம் மூலம் பேருந்து நுழைவுக் கட்டணமாக

ரூ.3.98 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 3.88 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

சந்தைகள், ஆடடிக்கும் தொட்டி, பேருந்து நிலையம் ஆகியவைகளில் வரப்பெற்ற வருவாய் விவரம் (கடந்த 3 ஆண்டுகள்)

2019–2019–ம் ஆண்டுக்கு 9 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கடந்த ஆண்டைவிட குறைவாக ஏலம் கோரப்பட்டுள்ளது.

| வருடம் | பேட்டை சந்தை தொகை (ரூ.இலட்சத்தில்) | ஆடு அடிக்கும் தொட்டி ரூ. | பேருந்து நிலையம் ரூ. |
|---|---|---|---|
| 2018–19 | 23.74 | | 3.70 |
| 2019–2020 | 22.86 | 1.12 | 3.88 |
| 2020–2021 | 26.10 | 1.16 | 4.10 |

## 18) தொழிற்சாலையும்,தொழில் கூடங்களும்

நகராட்சிப் பகுதியில் தனியாருக்கு சொந்தமான ரப்பர் தொழிற் சாலை ஒன்று உள்ளது. மாவு அரைக்கும் ஆலை 5 உள்ளது.

## 19 , மரம், நடுதலும், பூங்காவும்

அறிக்கை ஆண்டில் பல்வேறு வகையான மரங்கள் நடப்பட்டு உள்ளது. நகராட்சியால் மூன்று பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1) நகராட்சி வாசக சாலையில் உள்ள பூங்கா
2) நகராட்சி அலுவலக பூங்கா
3) பத்மனாபபுரம் கோட்டை பூங்கா

## 20) நில அபிவிருத்தி

தமிழ்நாடு நகரமைப்பு சட்டம் இந்நகரில் அமுலாக்கப்பட்டுள்ளது.

நகர் தீர்மானத் திட்டம் எதுவும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 21) இதர வருவாய் தரத்தக்க இனங்கள்

1)பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் பத்மனாபபுரம் அரண்மனை உள்ளது. மேற்படி அரண்மனையை பார்க்க வரும் சுற்றுலா பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை

நடப்பு ஆண்டிற்காக ரூ.16,71,575/– கீழ் குத்தகை தொகைக்கு விடப்பட்டுள்ளது.

**<u>கட்டணம் கழிப்பிடம் –4</u>**

<u>நகர மன்றத்தால் கீழ்க்கண்டவாறு கட்டண கழிப்பிடம் பராமரிக்கப்படுகிறது.</u>

| | | |
|---|---|---|
| பேருந்து நிலையம் | .. | 2 எண்ணம் |
| பொதுக் கழிப்பிடம் | .. | 6 எண்ணம் |
| மொத்தம் | .. | 8 எண்ணம் |

| பொதுக்கழிப்பிடங்கள் | |
|---|---|
| பேட்டை சந்தை | 1 |
| மீன் சந்தை | 1 |
| குமாரகோவில் | 1 |
| பேருந்து நிலையம் | 2 |
| குமாரகோவில் ஆர்ச் அருகில் | 1 |
| ஆர்.சி. தெரு | 1 |
| பத்மனாபபுரம் விவேகானந்தர் தெரு | 1 |

கட்டண கழிப்பிடத்தில் குத்தகை மூலம் ரூ. 1,42,122 /–வசூல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ரூ. 1,86,628/– வசூல் செய்யப்பட்டது.

## <u>22) சொத்துவரி சீராய்வு</u>

***<u>தொழில்வரி</u>***

1995 மற்றும் 1–10–2018 வருடத்திய திருத்தப்பட்ட தொழில்வரி சட்டத்தின்படி தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**மிருகங்கள் , வாகனங்கள் மீதான வரி–**

இந்த இனத்தின் கீழ் அறிக்கை ஆண்டில் வரிவிதிப்பு செய்யப்படவில்லை.

## <u>23) கேட்பு வசூல் நிலுவை</u>

அ) சொத்துவரி இனங்களில் நடப்பாண்டு கேட்பு .ரூ. 83.77 லட்சம் அதில் ரூ.71.12 லட்சம் வசூல் செய்யப்பட்டது. நிலுவை ரூ. 12.65 லட்சம் இத்தொகை அனைத்தும் வசூல்

செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நடப்பு கேட்பில் வசூல் 83.51 சதவீதமாகும்.

ஆ) வரி இல்லாத இனங்களில் நடப்பாண்டு கேட்பு ரூ. 67.63 இலட்சம் அதில் ரூ. 42.35 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. நிலுவை 25.29 இலட்சம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் நடப்பு கேட்பு வசூல் 62.61 சதவீதம்.

இ) அறிக்கை ஆண்டில் குடிநீர் கட்டணம் இனங்களில நடப்பு கேட்பு ரூ.26.96 இலட்சம் அதில் 15.49 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. நிலுவை ரூ.11.47 இலட்சம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## <u>24) நிதி நிலைமை</u>

<u>அ) பொது–</u>

இந்த ஆண்டு மொத்தம் வருமானம் ரூ. 379.50 இலட்சம் மொத்தம் செலவு ரூ. 376.50 இலட்சம் இறுதியிருப்பு ரூ. 29.00 லட்சம் ஆகும்.

<u>ஆ) சாதாரண வருமானங்கள் –</u>

மாநில அரசினரால் அறிக்கை ஆண்டில் நகராட்சிக்கு வழங்கிய மான்ய தொகை ரூ. 96.02 லட்சம் சென்ற ஆண்டு ரூ. 247.01 லட்சம் ஆகும்.

<u>இ) மூலதனச் செலவு–</u>

நடப்பு ஆண்டில் செய்யப்பட்ட மூலதனச் செலவு ரூ. 199.43 லட்சம் சென்ற ஆண்டில் ரூ. 92.99 லட்சம்.

<u>ஈ) கடன்கள் –</u>

அறிக்கையாண்டில் கடன்கள் ஏதும் நிலுவை இல்லை.

<u>உ) முதலீடுகள் –</u>

அறிக்கை ஆண்டு ஆரம்பத்தில் ரூ. 10,000 ஆயிரம் முதலீட்டு கணக்கில் இருப்பில் உள்ளது. அறிக்கை ஆண்டில் இறுதியில் முதலீட்டு கணக்கில் ரூ. 10,000 ஆயிரம் இருப்பு உள்ளது.

## <u>25. தூய்மை இந்தியா திட்டம் (Swachh Bharath Mission)</u>

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சியில் கழிப்பிடம் இல்லாத பொது மக்களுக்கு தனிநபர் கழிப்பிடம்

ரூ.8000/– மானியத்துடன் கட்டிக் கொடுக்கப்பட்டது. பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் மொத்தம் 197 குடும்பங்களுக்கு தனிநபர் கழிப்பிடம் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேலும் கழிப்பிட வசதியில்லாத வீட்டின் இடவசதி இல்லாத பொது மக்களுக்காக 2015–2016–ம் ஆண்டில் 4 சமுதாய கழிப்பிடங்கள் 13.50 இலட்சம் மதிப்பீட்டிலும், 2016–2017–ம் ஆண்டில் 1 சமுதாய கழிப்பிடம் ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**26) திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்**

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் தூய்மை இந்தியா இயக்கத்துடன் 132.60 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் 4 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் அறிக்கை ஆண்டில் முடிவு பெற்றுள்ளது.

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | செலவினம் (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் | 54.02 | 54.02 |
| 2. | சிறிய மின்கலத்துடன் கூடிய வண்டிகள் வாங்குதல். | 19.80 | 19.35 |
| 3. | L.C.V | 11.20 | 11.08 |
| 4. | பத்மனாபபுரம் நகராட்சி மருந்துகோட்டை உரக்கிடங்கில் Facal Sludge Treatment Plant 20 KLD அமைக்கும் பணி. | 213.00 | 70.04 (பணிகள் நடைபெற்று வருகின்றன. பகுதி பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது) |

இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் சுமார் 7 MT குப்பைகள் உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. தினசரி சேகரமாகும் குப்பைகள் முறையாக பிரிக்கப்பட்டு வாங்கப்படுகிறது. இதற்காக திடக்கழிவு துணை விதிகள் 2016 இயற்றப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண். 1034, நாள் 20–03–2017– ன் படி ஒப்புதல் பெற்று பத்திரிக்கையில் ஆட்சேபனை குறித்து விளம்பரப்படுத்தப்பட்டது (பத்திரிக்கையின் விளம்பரம் நாள் 18–04–2017) இது குறித்து பொது மக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. எனவே திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளை

நடைமுறைப்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்தும் அதனை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

27) <u>பிளாஸ்டி கழிவு மேலாண்மை விதிகள்.</u>

பத்மனாபபுரம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவின் மூலம் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 ஆகிய இரண்டும் முறையே நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டு (ந.க.எண். 11092/2012/2017டி3 நாள் 24–05–2017 & ந.க.எண். 13142/4/2017/டி3, நாள் 28–09–2017) மாவட்ட அரசிதழில் 02–03–2018 பிரசுரம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மட்கும் குப்பை, மட்காத குப்பைகளை பொது மக்கள் பிரித்து நகராட்சியிடம் வழங்குவதற்கும், ஒரு மேற்பார்வையாளர் மற்றும் 5 பரப்புரையாளர்களை

நிறுவனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் ஆகியோர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் சென்று சுகாதாரம் குறித்து கணக்கெடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மக்களிடம் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

<u>28) திறந்த வெளியில் மலம் கழிக்கும் இல்லாத நகராட்சி (ODF Declaration )</u>

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 197 தனிநபர் கழிப்பிடங்களும் 5 சமுதாய கழிப்பிடங்களும் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது பத்மனாபபுரம் நகராட்சியை பொது இடங்களில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சியாக புதிய அரசின் MOHWA அமைச்சகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டன. திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சியாக இந்நகராட்சி செயல்பட்டு வருகிறது.

<u>29) தணிக்கை</u>

2018–2019–ம் ஆண்டு முடிய தணிக்கை மொத்தம் 347 பத்திகள் நிலுவையாக உள்ளது.

<u>30) சொத்துக்களும், கடன்களும்</u>

நடப்பு ஆண்டில் நகராட்சியின் சொத்து மதிப்பு ரூ. 357.80 லட்சம் ஆகும்.

## 31) படைவீரர் கொடி நாள் வசூல்

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணையின்படி இந்நகராட்சிக்கு படைவீரர் கொடி நாள் வசூல் திட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கு ரூ.35000/– ஆகும். 100 சதவீதம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 32)நூலகம்

சர்.சி.பி. இராமசாமி ஐயர் நினைவு மண்டபம் கட்டிடத்தில் நகராட்சி நூலகம் இயங்கி வந்தது. மேற்படி நூலகம் , பத்மனாபபுரம் நகராட்சி நகர் மன்ற தீர்மானம் எண். 361 நாள் 30/07/2003 மற்றும் மன்றத் தீர்மானம் எண். 966 நாள் 31/8/2005–ன் படி படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்கள் கடிதம் ந.க.எண். 53891/2005/எம் நாள் 21–9–2005–ன் படி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் முன்னிலையில் மாவட்ட நூலகர் வசம் நகராட்சி ஆணையரால் ஒப்படைக்கப்பட்டு, தற்போது புதிய கட்டிடத்தில் நூலகம் இயங்கி வருகின்றது.

மேலும் மேற்படி கட்டிடம் வருவாய் துறை கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. அரசாணை எண். 801, நாள் 29/8/1997–ன்படி மேற்படி இடம் மற்றும் கட்டிடம் இந்நகராட்சிக்கு நில மாற்றம் செய்து வழங்கப்பட்டு நகராட்சி பராமரிப்பில் தற்போது உள்ளது.

## 33) பொது

அறிக்கையாண்டில் வழக்கம் போல் சுதந்திரதினம் ' நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். குடியரசு தினம் ஆணையர் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 34) அலுவலர்கள், பணியாளர்கள் உறவு முறை–

நிர்வாகத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளும் பணியாளர்களும் திருப்திகரமாக செயலாற்றின. அலுவலர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்களின் அணுகுமுறை சுமூகமாக இருந்தது. நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற அனைத்து பணியாளர்களும் முழு ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

பொதுவாக நிர்வாகம் திருப்திகரமாக இருந்தது.

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.